**OS No.3/2014**

PW 1 – நாகலிங்கம்

நாள் 18.04.2026

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

வாதி கோவிலில் என்ன பதவியில் உள்ளீர்கள் என்றால் தற்போது நான் பதவியில் இல்லை. வாதி கோவில் அமைந்துள்ள சர்வே எண் 48/88 என்பது வாதி கோவிலுக்குத் தான் பாத்தியப்பட்டது என்பதற்கு என்னென்ன ஆவணங்கள் தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று கேட்டால் ஜீ.ஆர், வரைபடம், கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த 10 ( 1 ), வாடகைதாரரா கடைவைத்திருந்தவர்களை வெளியேற்றுவதற்காக தாக்கல் செய்த வழக்குகளின் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் ஆவணப்பட்டியலில் மேற்சொன்ன ஜீ.ஆர், வரைபடம், கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த 10 ( 1 ) ஆகிய ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான்.

நான் தற்போது தாக்கல் செய்துள்ள உத்தேச வரைபமானது 3 இலக்க சொத்துக்களுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த போது 2 இலக்க சொத்துக்களுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

உங்கள் நிரூபண வாக்குமூலத்தில் கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் சில நபர்கள் கடைகளை அமைத்து வாடகைதாரர்களாக இருந்ததாகவும், அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்து கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடத்தை ஒப்படைப்பு எடுத்தாகவும் கூறியதில் அதில் ஒரு நபர் தான் இந்த 2, 3 பிரதிவாதிகளின் தந்தை பாக்கியம் ஆசாரி ஆவார் என்றால் சரிதான்.

2, 3 பிரதிவாதிகளின் தந்தை பாக்கியம் ஆசாரி என்பவர்

என்ன தொழில் செய்து வந்தார் என்று கேட்டால் மரத்தினால் மாட்டுவண்டி செய்யும் தொழில் செய்து வந்தார். வழக்கு நடத்தி மேற்படி பாக்கியம் ஆசாரி என்பவரிடம் இருந்து கோவில் இடத்தை ஒப்படைப்பு எடுத்ததாக குறிப்பிட்டுள்ளது மேற்படி வழக்கில் நான் தரப்பினராக இருந்தேனா என்றால் இருந்தேன்.

பாக்கியம் ஆசாரி நடத்தி வந்த கடைக்கு பின்புறம் தான் அவரது வீடு இருந்தது என்றால் சரிதான். அந்த வீடு இரண்டு கூரை கொட்டகைகளாக இருந்தது என்றால் சரிதான்.

நான் மேற்படி வழக்கின் மூலம் ஒப்படைப்பு பெற்றவுடன் கோவில் சம்பந்தப்பட்ட இடங்களை நான் நீதிமன்ற ஆணையாளர் மூலம் அளந்த கம்பிவேலி அமைத்துக்கொண்டேன் என்றால் சரிதான். ஆக்கிரமிப்பு போக மீதம் உள்ள இடத்தில் தான் நான் கம்பிவேலி போட்டேன். கடை பகுதியாக இருந்ததை மட்டும் தான் நாங்கள் கம்பி வேலி அமைத்துக்கொண்டோம். மற்ற பகுதிகளில் கம்பி வேலி அமைக்கவில்லை.

மேலே சொன்ன விசயத்தை நிரூபண வாக்குமூலத்திலோ பிராதிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கோவில் சம்பந்தப்பட்ட இடங்களை ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்து ஒப்படைப்பும் பெற்று அதன் அடிப்படையில் கம்பி வேலி போட்டு கோவிலுக்கு சம்பந்தப்பட்ட இடத்தை தனித்து காட்டிக்கொண்டீர்கள் என்றும் தற்போது அதற்கு அருகே உள்ள இடத்தில் ஆக்கிரமிப்பு இருப்பதாக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

பாக்கியம் ஆசாரி என்பவரிடம் இருந்து கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்தை மீட்க எந்த வருடம் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 2002 ம் வருடம் வழக்கு தாக்கல் செய்தேன். அந்த வழக்கில் மேற்படி பாக்கியம் ஆசாரி பட்டறை நடத்தி வருவதாகவும் அதற்கு பின் அவரது வீடு உள்ளதாக குறிப்பிட்டிருந்தீர்கள் என்றால் சரிதான்.

1 ம் பிரதிவாதி வீடு மற்றும் பட்டரை அமைந்துள்ள சர்வே நம்பவரும் கோவிலுக்கு பாத்தியமானது என்று கூறப்படும் சர்வே நம்பரும் வேறு வேறு ஆனது என்றால் சரிதான்.

1 ம் பிரதிவாதி வழக்கு காலத்தில் 1 வது இலக்க சொத்தை முழுவதும் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் சரிதான். எந்த வருடம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் வழக்கு தாக்கல் செய்த 2014 ம் வருடத்திற்கு பின்பு ஒரு வருடம் கழித்து செட் அமைத்து ஆக்கிரமித்து செய்துவிட்டார்.

1, 2 பிரதிவாதிகள் வாய்க்கால் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டியுள்ளதாக நான் என் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் அதற்கு ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் நான் தாக்கல் செய்துள்ள புல வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1 வது இலக்க சொத்தில் 1 ம் பிரதிவாதி கிழமேல் 10 ½ அடி , தென்வடல் 3 ½ அடி ஆக்கிரமிப்பு செய்ததாக குறிப்பிட்டுள்ளதில் மேற்படி ஆக்கிரமிப்பு நான் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள வழக்குகளின் மூலம் ஒப்படைப்பு எடுத்துக்கொண்ட பின்பு ஏற்பட்டதா என்றால் ஒப்படைப்புக்கு முன்பே ஆக்கிரமிப்பு செய்துவிட்டார்கள்.

ஆக்கிரமிப்பை அகற்ற என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொண்டீர்கள் என்றால் காவல்துறை நடவடிக்கை, சர்வே துறை நடவடிக்கையும் எடுத்தேன். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை.

2,3 பிரதிவாதிகள் 2010 ம் ஆண்டில் 2, 3 இலக்க சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்ததாக குறிப்பிட்டுள்ளதில் என்ன நடவடிக்கை மேற்கொண்டீர்கள் என்றால் நடவடிக்கை எடுக்கவில்லை. வாய்மொழியாக பேசினோம்.

நீதிமன்ற ஆணையாளர் மூலம் தாவா இடத்தை பார்வையிடும்

போது நீங்கள் அங்கிருந்தீர்களா என்றால் இருந்தேன். 1 இலக்க சொத்திற்குத் தான் கமிசன் நடத்தப்பட்டது. நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்த வரைபடம், அறிக்கையை பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையில் 2, 3 பிரதிவாதிகளான போஸ், ராமு ஆசாரி, பெரியராமசாமி, ராமலெட்சுமி ஆகியோர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேலே சொன்ன பெரியராமசாமி, ராமலெட்சுமி ஆகியோர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா இடத்தை நீதிமன்ற ஆணையாளர் பார்வையிடும் போது பிரதிவாதியோ, பிரதிவாதியின் வழக்கறிஞரோ ஆஜராகவில்லை என்றால் ஆஜராகவில்லை.

தாவா இடத்தை பார்வையிடுவது சம்பந்தமாக நீதிமன்ற ஆணையாளர் பிரதிவாதிகளுக்கு ஏதேனும் அறிவிப்பு அனுப்பினாரா என்று கேட்டால் அது பற்றி எனக்குத் தெரியாது. தாவா இடத்தை பார்வையிடும் போது பிரதிவாதிகள் அந்த இடத்தில் இருந்தார்கள்.

தாவா இடத்தை பார்வையிட்ட பின்பு தான் புதிதாக ஒரு சொத்தை பிராதில் திருத்தம் செய்தேன் என்று சொன்னால் சரிதான். அந்த புதிதாக சேர்க்கப்பட்ட சொத்து சம்பந்தமாக கமிசன் செய்வதற்கு மனு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ 2 ஆவணத்தில் அருகில் உள்ள சர்வே எண்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா இடத்தை பார்வையிடும் போது கம்பி வேலி அமைக்கப்பட்டிருந்த நிலையில் தான் பார்வையிடப்பட்டது என்றால் சரிதான்.

மேற்படி கம்பி வேலி அமைக்கப்பட்டிருந்ததை நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

நீ.ம.சா.ஆ 1 ல் ஓட்டுதாழ்வார வீடுகளாக இருந்தது என்று குறிப்பிட்டிருந்ததில் அவை எவ்வளவு பழமையானது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

நீ.ம.சா.ஆ 1 ல் இத்தனை அடிகள் ஆக்கிரமிப்பு என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்ன அந்த ஆக்கிரமிப்பு பகுதியில் இருந்தது என்று அதன் இயற்கை அமைப்பை குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

தாவா இடமும் பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களின் அடிப்படையில் அளவீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா இடத்தை பார்வையிடும் போது பிரதிவாதிகளுக்கு எந்தவித அறிவிப்பும் அனுப்படவில்லை என்றும் அவர்கள் அந்த இடத்திலும் இல்லை என்றும் அவர்களுக்கு தெரியாமல் இந்த நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை மற்றும் வரைபடம் தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

தாவா பிராதில் புதிதாக சேர்க்கப்பட்ட 3 வது இலக்க சொத்தை கட்டுப்படுத்தி புதிதாக நீதிமன்ற ஆணையாளரை நியமிக்கக் கோரி மனு தாக்கல் செய்து தாவா இடத்தை பார்வையிட தயாராக உள்ளீர்களா என்றால் 3 இலக்க சொத்தையும் சேர்த்து புதிதாக சர்வே செய்ய தயாராக உள்ளேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்பட்டது**.

–Sd–

Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

–Sd–
District Munsif,
Manamadurai.